## கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்

நாள் 12.03.2026

அசல் வழக்கு எண்.210/2014

வா.சா. 1 செங்கல்வராயன், த/பெ.அமாவாசிகான்

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

### குறுக்கு விசாரணை

இந்த வழக்கை உங்கள் தாயார் உஞ்சி அம்மாள் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். உங்கள் தாயார் இறந்த பிறகு உங்களை தரப்பினராக சேர்த்தார்கள் என்றால் சரிதான் . எதற்காக வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் நிலத்தில் உரிமை உள்ளது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். உங்கள் தாயார் வழக்கு சொத்தினை கன்னியப்பன் என்பவரிடமிருந்து கிரயம் பெற்றதாக சொல்லி உள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி கன்னியப்பன் என்பவருக்கு உரிமையான சொத்து என்று காட்டுவதற்கு ஏதேனும் ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா? என்றால் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்து கிரையம் செய்ய கன்னியப்பன் என்பவருக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரி இல்லை. உங்கள் தாயாருக்கு அதே போல் சொத்தை வாங்குவதற்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரி இல்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram